**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்**
**இ.ம.எண்.04/2023 IN அ.வ.எண்.54/2022**

2026ம் ஆண்டு ஜீலை மாதம் 27ம் நாள் மனுதாரர் தரப்பு சாட்சி ம.சா.1 ன் வாக்குமூலம் விசாரிக்கப்பட்டு 1969ம் ஆண்டின் 10வது சட்ட விதிகளின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டுப் பிரமாணம் செய்யப்பட்டது.

எனது சாட்சியப் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டதுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | வெங்கடேசன் | தொழில்: | |
| த/பெ: | லேட். செல்லன் | சமயம்: | இந்து |
| முகவரி: | அம்மாசிபாளையம் | வயது: | 56 |
| தாலுக்கா: | குமாரபாளையம் | மாவட்டம்: | நாமக்கல் |

27.07.2026
**முதல் விசாரணை**

நான் இம்மனுவின் 3ம் மனுதாரர் ஆவேன். நான் எனது முதல் விசாரணைக்காக நிரூபணப் பிரமாணப் பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன். அதனைப் படித்துப் பார்த்துக் கையொப்பம் செய்தேன். அதில் உள்ள சங்கதிகளை நான் சொல்லி தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். இம்மனுவில் நான் இன்று தாக்கல் செய்துள்ள கீழ்க்கண்ட ஆவணங்களைக் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | 20.01.1936 | வரதனின் தகப்பனார் குருவன் பெயரில் உள்ள கிரைய ஆவணம் (ஆவண எண்.82/1936) | சான்றிட்ட நகல் | ம.சா.ஆ.1 |
| 2. | 12.02.1957 | குருவனின் 3வது மகன் சீரங்கன் அவர்கள் அவரின் சகோதரர்கள் வரதன் மற்றும் பாப்பன் பெயரில் உள்ள கிரைய ஆவணம் (ஆவண எண்.375/1957) | சான்றிட்ட நகல் | ம.சா.ஆ.2 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | 18.04.1972 | வரதன் அவர்கள் தாவா சொத்தில் உள்ள கிணற்றில் தண்ணீர் இறைப்பதற்கு டீசல் வாங்க பெறப்பட்ட கிராம நிர்வாக அதிகாரி சான்று<br>**(உரிய அதிகாரியால் சான்று கொடுக்கப்படவில்லை மற்றும் தாக்கல் செய்யப்படவில்லை என்ற ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)** | அசல் | ம.சா.ஆ.3 |
| 4. | – | வம்சா வழி பட்டியல் | கணினி நகல் | ம.சா.ஆ.4 |
| 5. | 16.02.2026 | தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் 3ம் மனுதாரர் பெற்ற கொக்கராயன்பேட்டை கிராமம் சர்வே எண்.118/1ன் 1960ம் வருட அ பதிவேடு | சான்றிட்ட நகல் | ம.சா.ஆ.5 |

**(எதிர்மனுதாரர்கள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**